# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

## அசல் வழக்கு எண். 159/2020

வாதிகள் தரப்பு 2 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. வேல்முருகன், இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | |
|---|---|---|
| பெயர் | ராமச்சந்திரன் வா.சா.-2 | சாதி |
| த/பெ. | | மதம் |
| கிராமம் | | தொழில் |
| தாலுகா | | வயது |

---

முதல் விசாரணை 03-11-2023.

நான் தம்மநாயக்கன்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சிய அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். சாட்சிய அழைப்பாணையில் கண்ட ஆவணங்களின் அசல் மற்றும் சான்றிட்ட நகல்களை நான் கொண்டுவந்துள்ளேன். சாட்சி அழைப்பாணையில் கண்ட தம்மநாயக்கன்பட்டி கிராம சர்வே எண். 19/1க்குரிய கணினிப் பட்டாவின் இணையதள நகலை தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.1** ஆகும். மேற்படி சரவே எண் 19/1க்குரிய அ பதிவேட்டின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.2** ஆகும். மேற்படி புல எண் 19/1க்குரிய புலவரைபடத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.3** ஆகும். மேற்படி புல எண்ணுக்குரிய சாகுபடி அடங்கல் கணக்கின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.4** ஆகும். புல எண் 58/4க்குரிய கணினிப்பட்டாவின் இணையதள நகல் தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.5** ஆகும். மேற்படி புல எண்ணுக்குரிய அ பதிவேட்டின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.-6** ஆகும். புலஎண் 58/4க்குரிய புல வரைடத்தின்

சான்றிடட நகலை தாக்கல் செய்கிறேன் அது **சா.சா.ஆ.**-7 ஆகும். மேற்படி புல எண்ணுக்குரிய சாகுபடி அடங்கல் கணக்கின் சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.**-8 ஆகும்.

பிரதிவாதிகள் தோன்றாத் தரப்பினர் என்பதால் கு.வி. இல்லை என முடிக்கப்படுகிறது.